NSW GOVERNMENT | Education Public Schools

SCHOOL SWIMMING AND WATER SAFETY PROGRAM

Message to Parents / Caregivers

பெற்றோர்/கவனித்துக் கொள்பவர்களுக்கான செய்தி

எமது பள்ளிப் பாடதிட்டத்தில், நீச்சல் கற்றுக் கொள்ளும் திட்டத்தை சேர்த்துக் கொள்வதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கிறது.

NSW Department of Education பாடசாலை நீச்சல் திட்டம் என்பது ஓர் தீவிர நீச்சல் கற்றுக் கொள்ளும் திட்டமாகும், இத்திட்டம் தண்ணீரைக் கண்டு அச்சப்படுவதைத் தவிர்த்து திடநம்பிக்கையைக் கொடுக்கிறது மேலும் தண்ணீர் பாதுகாப்பு மற்றும் தண்ணீரிலிருந்து தப்பிப் பிழைத்தல் குறித்த அடிப்படையான திறமைகளை மாணவர்களுக்கு வழங்குகிறது. இத்திட்டம் பத்து நாட்களுக்கு நடத்தப்படுகிறது. ஒவ்வொரு நாள் பயிற்சியும் 45 நிமிடங்களுக்கு நடைபெறும்.

**தண்ணீர் பாதுகாப்பு மற்றும் தண்ணீரிலிருந்து தப்பிப் பிழைத்தல் திறமைகளின் திருப்திகரமான அளவை அடையாத மாணவர்களும், உதவியில்லாமல், ஆழமான தண்ணீரில் 25 மீட்டர் வரைக்கும் நம்பிக்கையுடன் நீந்த முடியாத மாணவர்களும், இந்த பாடசாலை நீச்சல் திட்டத்தில் பங்கேற்கத் தகுதியடைகிறார்கள். Years 2-6 -ல் உள்ள பலவீனமாக உள்ள நீச்சலடிக்கும் மாணவர்களிலும், அதே போல ஆஸ்திரேலியாவிற்குப் புதிதாக வருகிறவர்கள் மற்றும் ஊமுற்ற மாணவர்கள் போன்ற பிரத்தியேகத் தேவைகளுள்ள மாணவர்களிலுமே இத்திட்டம் கவனம் செலுத்துகிறது.**

அறிவுறுத்தல் இடம்பெறுமிடம் ______________________________
Name of pool

இத்திட்டம் **இரண்டு வாரங்களுக்கு தினமும்** தொடந்து நடைபெறும்.

ஆரம்பத் தேதி ____________________ முடிவுத் தேதி ____________________
Start date Finish date

அறிவுறுத்தல்களுக்கென்று கட்டணம் எதுவுமிறாது.

போக்குவரத்து செலவு ____________________ ஒரு நாளுக்கு
Daily transport cost

நீச்சல் குளத்தில் நுழையும் செலவு ____________________ ஒரு நாளுக்கு
Daily pool entry cost

10 நாள் திட்டத்திற்கான மொத்தச் செலவு ____________________
Total cost for 10 days

ஒவ்வொரு குழந்தையும் நீச்சலுடை, ஒரு துண்டு, ஓர் ரவிக்கை அல்லது சட்டை, ஒரு தொப்பு மற்றும் குளிரான நாளில் சூடேற்றும் உடை ஆகியவற்றைக் கொண்டு வந்துவிட வேண்டும். வெளியிடத்தில் உள்ள நீச்சல் குளத்தில் அறிவுறுத்தல்கள் இடம்பெறும் போது, போதுமான அளவிற்கான வெயில் பாதுகாப்பு களிம்பை, உதாரணமாக, SPF 30+ broad spectrum, தண்ணீரில் கரையாத சன் ஸ்க்ரீன் தொடர்ந்து பூசிக் கொள்வது சிபாரிசு செய்யப்படுகிறது. ஓர் டீ-சர்ட் அல்லது ரேஷ் சர்ட் போட்டுக் கொள்வதும் சிபாரிசு செய்யப்படுகிறது (நீச்சல் குள நிர்வாகம் அனுமதிக்கிற ஆடை).

பாடசாலை நீச்சல் திட்டத்தின் போது, மாணவர்கள் கண்ணாடி இல்லாமலேயே அனைத்து தண்ணீர் பாதுகாப்புத் திறமைகளுக்கும் மதிப்பீடு செய்யப்படுவார்கள்.

உங்கள் குழந்தை இத்திட்டத்திற்குத் தகுதியடைகிற பட்சத்தில், தயவுசெய்து ஒப்புதல் படிவத்தில் கையொப்பமிட்டு, அதனை உங்கள் குழந்தையின் வகுப்பு ஆசிரியருக்கு அனுப்பி வையுங்கள்.

முதல்வர்: ____________________ தேதி: ____________________
Name of principal Date

TAMIL